உ

சிவமயம்

# அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்

மதுரை.



# சித்திரைப் பெருவிழா அழைப்பிதழ்

17.04.2018 முதல் 29.04.2018



அருள்மிகு மீனாட்சிஅம்மன் பட்டாபிஷேகம்

ஆடக மதுரை அரசே போற்றி !

கூடல் இலங்கு குருமணி போற்றி !

உ
சிவமயம்

# அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை.

### தலம், தீர்த்தம், மூர்த்தி சிறப்பு

கைத்தலம்நான்கு இரண்டுஉடைய மலர்ககடவுள் மேல் ஒருநாள், கயிலை ஆதி
எத்தலமும் ஒருதுலைஇட்டு, இத்தலமும் ஒருதுலைஇட்டு, இரண்டும் தூக்க,
உத்தமமாம் திருஆல வாய்மிகவும் கனத்ததுகண்டு, உலகின் மேலா
வைத்தலம் இதுஎன்றால், இதன்பெருமை யாவரே வழுத்தற் பாலார்?

- பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணம்

திருஆல வாய்க்குஇணையாம் ஒருதலமும், தெய்வமணம் செய்யப் பூத்த
மருஆர்பொன் கமலம்நிகர் தீர்த்தமும்,அத் தீர்த்தத்தின் மருங்கின் ஞான
உருவாகி உறைசோம சுந்தரன்போல் இகபரம்தந்து, உலவா வீடு
தருவானும் முப்புவனத் தினும்இல்லை; உண்மைஇது, சாற்றின் மன்னோ!

- பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணம்

**சித்தி விநாயகர்**

சத்தியாய்ச் சிவமாகித் தனிப்பர
முத்தியான முதலைத் துதிசெய
சுத்தியாகிய சொற்பொருள் நல்குவ
சித்தியானை தன்செய்ய பொற்பாதமே

- பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணம்

**சோமசுந்தரக் கடவுள்**

சடைமறைத்துக் கதிர்மகுடந் தரித்து நறுங் கொன்றையந்தார் தணந்து வேப்பந்
தொடைமுடித்து விடநாகக் கலனகற்றி மாணிக்கச் சுடர்ப்பூ ணேந்தி
விடைநிறுத்திக் கயலெடுத்து வழுதிமரு மகனாகி மீன நோக்கின்
மடவரலை மணந்துலகம் முழுதாண்ட சுந்தரனை வணக்கஞ் செய்வாம்.

- பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணம்

**அங்கயற்கண்ணி**

பங்கயற்கண் ணரியபரம் பரனுருவே தனக்குரிய படிவ மாகி
இங்கயற்கண் அகனுலக மெண்ணிறந்த சராசரங்க ளீன்றும் தாழாக்
கொங்கையற்கண் மலர்க்கூந்தற் குமரி பாண்டியன் மகள் போற் கோலங் கொண்ட
அங்கயற்கண் ணம்மையிரு பாதப்போது எப்போதும் அகத்துள் வைப்பாம்.

- பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணம்

திருஆல வாய்என்று கேட்டவரே அறம்பெறுவர்; செல்வம் ஓங்கும்
திருஆல வாய்என்று நினைந்தவரே பொருள்அடைவர்; தேவ தேவன்
திருஆல வாய்அதனைக் கண்டவரே இன்பநலம் சேர்வர் என்றும்
திருஆல வாயிடத்து வதிந்தவரே பரவீடு சேர்வர் அன்றே.

- பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணம்

உலகம் யாவையும் ஈன்றவள் உம்பருள் உயர்ந்த
திலக நாயகி, பரஞ்சுடர், சேய்என மூன்று
தலைவ ரால்முறை செய்தநாடு இஃதுஅன்றிஇச் சலதி
சுலவு பாரின்உண் டாகுமோ? துறக்கத்தும் அஃதே.

- பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணம்

**மதுரைக்கலம்பகம்**

தமரநீர்ப் புவன முழுதொருங் கீன்றாள்
தடாதகா தேவி என்றொருபேர்
தரிக்க வந்த துவும் தனிமுத லொரு நீ
சவுந்திர மாறனா னதுவும்
குமரவேள் வழுதி உக்கிரன் எனப்பேர்
கொண்டதும் தண்டமிழ் மதுரம்
கூட்டுண வெழுந்த வேட்கையால் எனிலிக்
கொழிதமிழ்ப் பெருமையா ரறிவார்
பமரம்யாழ் மிழற்ற நறவு கொப் பளிக்கும்
பனிமலர்க் குழலியர் பளிக்குப்
பானிலா முன்றிற்று நிலா முத்தின்
பந்தரிற் கண்ணிமை யாடா
தமரர் நா டியரோ டம்மனை யாட
வையநுண் ணுசுப்பள வலவென்று
அமரரு மருளுந் தெளிதமிழ்க் கூடல்
அடலரா அலங்கல்வே ணியனே! - குமரகுருபரர்

பேரன்புடையீர் வணக்கம்,

மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் நிகழும் திருவள்ளுவர் ஆண்டு - 2049, 1427 –ஆம் பசலி சித்திரைப் பெருவிழா சித்திரைத் திங்கள் 04–ஆம் நாள் முதல் சித்திரைத் திங்கள் 16-ஆம் நாள் வரை (17.04.2018 முதல் 29.04.2018 வரை) மிகவும் சீரும் சிறப்புமாக நடைபெற உள்ளது. இச்சித்திரைப் பெருவிழாவின் முக்கியத் திருநாட்களாக 18.04.2018 சித்திரைத் திங்கள் 05-ஆம் நாள் புதன்கிழமை அன்று காலை 10.05 மணிக்கு மேல் 10.29 மணிக்குள் மிதுன லக்னத்தில் கொடியேற்றமும், 25.04.2018 சித்திரைத் திங்கள் 12-ஆம் நாள் புதன்கிழமை இரவு 07.40 மணிக்கு மேல் 08.04 மணிக்குள் விருச்சிக லக்னத்தில் அருள்மிகு மீனாட்சி அம்மனுக்குப் பட்டாபிஷேகமும், 26.04.2018 வியாழக்கிழமை சித்திரைத் திங்கள் 13–ஆம் நாள் அருள்மிகு மீனாட்சி அம்மன் திக்கு விஜயமும், 27.04.2018 வெள்ளிக்கிழமை சித்திரைத் திங்கள் 14-ஆம் நாள் காலை 09.05 மணிக்கு மேல் 09.29 மணிக்குள் மிதுன லக்னத்தில் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாணமும், 28.04.2018 சனிக்கிழமை சித்திரைத் திங்கள் 15-ஆம் நாள் காலை 6.30 மணிக்கு அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருத்தேரோட்டமும், 29.04.2018 ஞாயிற்றுக்கிழமை சித்திரைத் திங்கள் 16-ஆம் நாள் தீர்த்தம் மற்றும் தேவேந்திர பூஜையும் வெகுசிறப்பாக நடைபெற உள்ளது.

சித்திரைப் பெருவிழாவில் பக்தகோடி பெருமக்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டு மண்ணில் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும் அண்ணலார் அவர் தம் நல்விழாப் பொலிவு கண்டார்த்தல் உண்மையாம் என உலகர் முன் வருகென உரைப்போம் எனும் சேக்கிழாரின் வாக்கிற்கு இணங்க அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரரின் திருவருளைப் பெற்று எல்லா வளமும் பெற வேண்டி விழைகிறோம்.

**கருமுத்து தி. கண்ணன்**
தக்கார்

**நா. நடராஜன்**
இணை ஆணையர் / செயல்அலுவலர்

ஞாலம் நின்புகழே மிக வேண்டும் தென்ஆலவாயில் உறையும் எம்ஆதி

*17-04-2018 சித்திரை 04 -வாஸ்து சாந்தி* (நிலத்தேவர் வழிபாடு)

# முதலாம் திருநாள் – கொடியேற்றம் – கற்பக விருட்சம் – சிம்ம வாகன உலா







### கற்பக விருட்சம்

உருத்திரனை உமாபதியை உலகானானை
உத்தமனை நித்திலத்தை ஒருவன் தன்னைப்
பருப்பதத்தைப் பஞ்சவடி மார்பினானைப்
பகல் இரவாய் நீர் வெளியாய்ப் பரந்து நின்ற
நெருப்பதனை நித்திலத்தின் தொத்தொப்பானை
நீறணிந்த மேனியராய் நினைவார் சிந்தைக்
கருத்தவனைக் கஞ்சனூர் ஆண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந்தேனே.

– நாவுக்கரசர் தேவாரம்

### சிம்மம்

அரசுஇறை கொள்ளும் செம்பொன்
அத்தாணி இருக்கை எய்தி,
நிரைசெறி மடங்கல் ஆறு
முடங்கின நிமிர்ந்து தாங்க,
விரைசெறி மலர்மீப் பெய்த
வியன்மணித் தவிசில் மேவித்
திரைசெறி அமுதின் செய்த
பாவைபோல் சிறந்து மாதோ.

– பரஞ்சோதியார் திருவிளையாடற்புராணம்

### கொடியேற்றம்

கூறுகொண்டாய் மூன்றும் ஒன்றாகக்கூட்டியோர் வெங்கணையால்
மாறுகொண்டார் புரமெரித்த மன்னவனே கொடிமேல்
ஏறுகொண்டாய் சாந்தமீதென்று எம்பெருமான் அணிந்த
நீறுகொண்டார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே.

– சம்பந்தர் தேவாரம்

**1427–ஆம் பசலி, திருவள்ளுவர் ஆண்டு 2049**

**நாள் : 18.04.2018** **சித்திரை – 05** **கிழமை : புதன்**

| | |
|---|---|
| வாகனம் விபரம் | : வெள்ளி சிம்மாசனம் |
| எழுந்தருளும் மண்டபம் | : கோயிலுக்குள் குலாலர் மண்டகப்படி |
| இரவு எழுந்தருளும் நேரம் | : 7.00 மணியளவில் |
| எழுந்தருளும் வீதிகள் | : நான்கு மாசி வீதிகள் |
| வாகனம் | : கற்பக விருட்சம் – சிம்மம் |

திருவிதிவுலா முடிவுற்று திருக்கோயிலுக்கு வந்து சேரும் நேரம் : இரவு 10.30 மணியளவில்

**விபரம் : பகல் 10.04 நாழிகைக்கு மேல் 11.00 நாழிகைக்குள் (காலை 10.05 மணியில் இருந்து 10.29 மணிக்குள்) மிதுன லக்கனத்தில் கொடியேற்றம்**

## திருவிழா தத்துவமும் பலனும் :

கொடியேற்றப்படும் கொடிப்பட்டத்தில் பொறிக்கப்பட்டுள்ள ரிஷபம் தர்ம உருவாகவும் ஆத்மாவின் உருவாகவும் மதிக்கப்படுகிறது. ஆத்மாக்களையும் தர்மத்தையும் கீழ்நிலையில் இருந்து உயர்நிலைக்கு கொண்டு செல்லும் இறைவனின் கருணை இக்கொடியேற்ற திருவிழாவில் விளக்கப்படுகிறது. பொதுவகையில் உயிர்களுக்கு அருள்புரியும் இறைவன், சிறப்பு வகையில் அருள்புரிய இப்பன்னிரண்டு நாட்களும் ஆயத்தமாகக் காத்திருக்கிறான் என்பதை இக்கொடியேற்றம் உணர்த்துகிறது.

முதல் நாள் திருவிழா தூல தேகத்தை நீக்கிக் கொள்ளும் பயனை விளக்குவதாக அமையும். முதல் நாள் இரவு மரத்தடியில் சிவபெருமான் வீற்றிருப்பதாக விளக்கும் கற்பக விருட்சக வாகனம் எழுந்தருளும். இதை விருத்திக்கிரம சிருட்டிக் கோலம் என்பர். மரத்தின் கிளைகளும், இலைகளும் தத்துவங்களாகவும் உயிர்வர்க்கங்களாகவும் உள்ளன. இவற்றின் அடியில் இறைவன் இருந்து சிருட்டிக்கெல்லாம் வேர்போல் தாம் இருந்தருளுவதை இது உணர்த்துகின்றது.

# இரண்டாம் திருநாள் – பூத – அன்னவாகன உலா





### பூத வாகனம்

மருவார் கொன்றை மதிசூடி மாணிக்கத்தின் மலைபோல
வருவார் விடைமேல் மாதோடு மகிழ்ந்து பூதப்படைசூழத்
திருமால் பிரமன் இந்திரற்கும் தேவர் நாகர் தானவர்க்கும்
பெருமான் கடவூர் மயானத்துப் பெரிய பெருமானடிகளே.

– சுந்தரர் தேவாரம்

### அன்னவாகனம்

மதிமலி புரிசை மாடக்கூடற் பதிமிசை நிலவு பால் நிற வரிச்சிறகு
அன்னம் பயில் பொழில் ஆலவாயில் மன்னிய சிவன்யான் மொழி தரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்கு உரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச் செருமா உகைக்குஞ் சேரலன் காண்க
பண்பால் யாழ்பயில் பாண பத்திரன் தன்போல் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன் மாண் பொருள் கொடுத்து வரவிடுப்பதுவே.

– இறையனார் திருமுகப்பாசுரம்.

### 1427–ஆம் பசலி, திருவள்ளுவர் ஆண்டு 2049

**நாள் : 19.04.2018** **சித்தரை 06** **கிழமை : வியாழன்**

| | |
|---|---|
| காலை எழுந்தருளும் நேரம் | : 7.00 மணியளவில் |
| எழுந்தருளும் வீதிகள் | : நான்கு மாசி வீதிகள் |
| வாகனம் விபரம் | : தங்கச்சப்பரம் |
| எழுந்தருளும் மண்டபம் | : கோயிலுக்குள் முத்துராமய்யர் மண்டகப்படி |

திருவிதிவுலா முடிவுற்று திருக்கோயிலுக்கு வந்து சேரும் நேரம் : காலை 9.30 மணியளவில்

| | |
|---|---|
| இரவு எழுந்தருளும் நேரம் | : 7.00 மணியளவில் |
| எழுந்தருளும் வீதிகள் | : நான்கு மாசி வீதிகள் |
| வாகனம் விபரம் | : பூதம் – அன்னம் |

திருவிதிவுலா முடிவுற்று திருக்கோயிலுக்கு வந்து சேரும் நேரம் : இரவு 10.30 மணியளவில்

### திருவிழா தத்துவமும் பலனும் :

இரண்டாம் நாள் திருவிழா தூலம், சூக்குமம் என்னும் இருவகை யாக்கையும் நீக்கிக் கொள்ளும் பயனைக் குறிப்பதாகும். இரண்டாம் நாள் இரவு சிவபெருமான் வீற்றிருப்பதாக விளக்கும் பூதவாகனம் விருத்திக்கிரம சங்காரக் கோலம் என்பர். பூதகணங்களின் தலைவராக விளங்குகின்ற சிவபெருமான் உலக உயிர்களை உய்விக்கும் பொருட்டு இவ்வருட்கோலத்தில் எழுந்தருளுகின்றார்.

ஞாலம் ஏழுமாம் ஆலவாயிலார் சீலமே சொலீர் காலன் வீடவே.

# மூன்றாம் திருநாள் – கைலாசபர்வதம் – காமதேனு வாகன உலா





### கைலாசபர்வதம்

பொன்னின் வெண் திருநீறு புனைந்தெனப்
பன்னும் நீள்பனி மால்வரைப் பாலது
தன்னை யார்க்கும் அறிவரியான் என்றும்
மன்னிவாழ் கயிலைத் திருமா மலை.

– சேக்கிழார் பெரியபுராணம்.

### காமதேனு

இழைஇடை நுழையா வண்ணம் இடைஇறவீங்கு கொங்கைக்
குழைஇடை நடந்துமீளும் கொலைக்கணார் குழுவும், தான
மழைகவிழ் கடாத்து வெள்ளை வாரணம், மாவும், கோவும்
தழைகதிர் மணியும், தெய்வ தருக்களும் கவர்ந்து மீண்டாள்.

– பரஞ்சோதியார் திருவிளையாடற்புராணம்

**1427–ஆம் பசலி, திருவள்ளுவர் ஆண்டு 2049**

**நாள் : 20.04.2018** **சித்திரை – 07** **கிழமை : வெள்ளி**

| | |
|---|---|
| காலை எழுந்தருளும் நேரம் | : **7.00 மணியளவில்** |
| எழுந்தருளும் வீதிகள் | : **நான்கு மாசி வீதிகள்** |
| வாகனம் விபரம் | : **தங்கச்சப்பரம்** |
| எழுந்தருளும் மண்டபம் | : **கோயிலுக்குள் கல்யாண சுந்தரமுதலியார் மண்டகப்படி** |

திருவீதிவுலா முடிவுற்று திருக்கோயிலுக்கு வந்து சேரும் நேரம் : காலை 9.30 மணியளவில்

| | |
|---|---|
| இரவு எழுந்தருளும் நேரம் | : **7.00 மணியளவில்** |
| எழுந்தருளும் வீதிகள் | : **நான்கு மாசி வீதிகள்** |
| வாகனம் விபரம் | : **கைலாசபர்வதம் – காமதேனு** |

திருவீதிவுலா முடிவுற்று திருக்கோயிலுக்கு வந்து சேரும் நேரம் : இரவு 10.30 மணியளவில்

## திருவிழா தத்துவமும் பலனும் :

மூன்றாம் நாள் திருவிழா மூவினையும், முப்புத்தியும், முக்குணமும், மும்மலமும், முப்பிறப்பும், முக்குற்றமும், முப்பற்றும் முதலானவற்றை ஒழித்தற் பொருட்டாகும். மூன்றாம் நாள் இரவு இராவணனது உடம்பின் மேலுள்ள கைலாச பர்வதத்தில் இறைவன் எழுந்தருளுகிறான். இவ்வாகனம் கைலாச பர்வதவாகனம் எனக் கூறப்படும். இராவணன் ஆணவ மலம் முதிர்ந்த ஜீவாத்மா. அகங்காரத்தால் எதுவும் செய்யக் கூசாதவன். அவன் தனது திமிரால் கைலாச பர்வதத்தைத் தூக்கி எடுக்க, சிவபெருமான் கால்விரலை ஊன்ற, அவன் அலறி கை நரம்பால் வீணை உண்டாக்கி சாமகானம் பாடினான். இறைவன் மகிழ்ந்து அவனுக்கு அருள்புரிந்தார். இது ஸ்திதி அல்லது காப்பாற்றுதலைக் குறிக்கும். இதிலிருந்து இறைவனுக்கு தீங்கு செய்தவர்களும் அடங்கி நின்று வழிபடுவாராயின் அவனுக்கும் இறைவன் அருள்புரிவான் என்பதும், அவனது பெருந்தகைமையும் நன்கு விளங்குகின்றது.

ஆல நீழலார் ஆலவாயிலார் கால காலனார் பால தாமினே.

# நான்காம் திருநாள் – தங்கப்பல்லக்கு உலா





## தங்கப்பல்லக்கு

எந்தையீசன் எம்பெருமான் ஏறமர் கடவுள் என்றேத்தி
சிந்தை செய்பவர்க்கு அல்லால் சென்றுகை கூடுவதன்றால்
கந்த மாமலர் உந்திக் கடும்புனல் நிவாமல்கு கரைமேல்
அந்தண் சோலை நெல்வாயில் அரத்துறை அடிகள்தம் அருளே.

– சம்பந்தர் தேவாரம்.

**1427–ஆம் பசலி, திருவள்ளுவர் ஆண்டு 2049**

**நாள் : 21.04.2018** **சித்திரை – 08** **கிழமை : சனி**

காலை எழுந்தருளும் நேரம் : **9.00 மணியளவில்**
எழுந்தருளும் வீதிகள் : **சின்னக்கடைத் தெரு, தெற்குவாசல் வழியாக வில்லாபுரம் செல்லுதல்**
வாகனம் விபரம் : **தங்கப்பல்லக்கு**
எழுந்தருளும் மண்டபம் : **அழகப்பபிள்ளை – தானப்பபிள்ளை வகையறா வில்லாபுரம் பாவக்காய் மண்டகப்படி**

மாலை எழுந்தருளும் நேரம் : **6.00 மணியளவில்**
எழுந்தருளும் வீதிகள் : **தெற்குவாசல், சின்னக்கடைத் தெரு வழியாக வந்து சித்திரை விதிகள் சுற்றி கோயிலுக்குள் வருதல்**
வாகனம் விபரம் : **தங்கப்பல்லக்கு**

திருவிதிவுலா முடிவுற்று திருக்கோயிலுக்கு வந்து சேரும் நேரம் : இரவு 9.30 மணியளவில்


## திருவிழா தத்துவமும் பலனும் :

நான்காம் நாள் திருவிழா நாற்கரணம், நால்வகைத் தோற்றம் என்னும் இவற்றை நீக்குதற் பொருட்டு நிகழ்வதாகும்.

அந்தமில் புகழ் எந்தை ஆலவாய் பந்தியார் கழல் சிந்தை செய்ம்மினே.

# ஐந்தாம் திருநாள் – தங்கக்குதிரை வாகன உலா – வேடர்பறிலீலை





## தங்கக்குதிரை

நரியைக் குதிரை செய்வானும் நரகரைத் தேவு செய்வானும்
விரதம் கொண்டாட வல்லானும் விச்சின்றி நாறு செய்வானும்
முரசதிர்ந்து ஆனைமுன் ஓடமுன் பணிந்து அன்பர்களேத்த
அரவரைச் சாத்தி நின்றானும் ஆரூர் அமர்ந்த அம்மானே.
– நாவுக்கரசர் தேவாரம்.

**1427–ஆம் பசலி, திருவள்ளுவர் ஆண்டு 2049**

**நாள் : 22.04.2018** **சித்திரை – 09** **கிழமை : ஞாயிறு**

| | |
|---|---|
| காலை எழுந்தருளும் நேரம் | : 9.00 மணியளவில் |
| எழுந்தருளும் வீதிகள் | : மாசி வீதிகள் |
| வாகனம் விபரம் | : தங்கச்சப்பரம் |
| எழுந்தருளும் மண்டபம் | : வடக்குமாசி வீதி இராமாயணச் சாவடி ஆயிரம் வீட்டு யாதவர்களுக்குச் சொந்தமான ஸ்ரீ இராமசுவாமி, ஸ்ரீ நவநீதகிருஷ்ணசுவாமி தேவஸ்தான மண்டகப்படி |
| இரவு எழுந்தருளும் நேரம் | : 7.00 மணியளவில் |
| எழுந்தருளும் வீதிகள் | : வடக்கு மாசி வீதி, கீழ மாசி வீதி, அம்மன் சன்னதி வழியாக கோயிலுக்குள் வருதல் |
| வாகனம் விபரம் | : தங்கக்குதிரை |

திருவீதிவுலா முடிவுற்று திருக்கோயிலுக்கு வந்து சேரும் நேரம் : இரவு 9.30 மணியளவில்

விபரம் : இரவு 9.30 மணிக்கு கோயிலுக்குள் எழுந்தருளி மீனாட்சி நாயக்கர் மண்டபத்தில் வேடர் பறிலீலை

## திருவிழா தத்துவமும் பலனும் :

ஐந்தாம் நாள் திருவிழா புலன்களின் வழியே செல்லும் ஐம்பொறிகளும், பஞ்ச அவத்தைகளும், பஞ்ச மலங்களும் தம்வலிகுன்றலைக் குறிப்பதாகும். ஐந்தாம் நாள் இரவு அசுவ (குதிரை) வாகன ஆரோகணம். இது ஸம்ஹாரக் கோலமாகும். தர்ம, அர்த்த, காம, மோட்சங்களாகிய (அறம், பொருள், இன்பம், வீடு) எனும் நான்கு கால்களையும், கிரியை, ஞானம் எனும் இரண்டு காதுகளையும், பரஞானம், அபரஞானம் எனும் இரண்டு கண்களையும், விதியாகிய முகத்தையும், நிடேதமாகிய வாலையும், ஆகமங்கள் என்கிற ஆபரணங்களையும், மந்திரங்கள் எனும் பாதஸரத்தையும், கடிவாளம் எனும் பிரணவத்தையும், அண்ட கோடிகளாகிய முதுகையும், உபநிடதங்களாகிய சேணத்தையும் கொண்ட வேதக்குதிரையில் இறைவன் சவாரி செய்கிறான் என்பதனையும் உணர்த்துகிறது.

ஆடலேற்றினான் கூடல் ஆலவாய் பாடியே மனம் நாடி வாழ்மினே.

# ஆறாம் திருநாள் – ரிஷபவாகன உலா – சைவ சமய ஸ்தாபித வரலாற்றுலீலை





**ரிஷப வாகனம்**

பாசமான களைவார் பரிவார்க்கு அமுதம் அனையார்
ஆசைதீரக் கொடுப்பார் அலங்கல் விடைமேல் வருவார்
காசை மலர் போல் மிடற்றார் கடவூர் மயானம் அமர்ந்தார்
பேச வருவார் ஒருவர் அவர் எம்பெருமானடிகளே.

– சம்பந்தர் தேவாரம்.

**1427–ஆம் பசலி, திருவள்ளுவர் ஆண்டு 2049**

**நாள் : 23.04.2018** **சித்திரை – 10** **கிழமை : திங்கள்**

| | |
|---|---|
| காலை எழுந்தருளும் நேரம் | : **7.30 மணியளவில்** |
| எழுந்தருளும் வீதிகள் | : **நான்கு மாசி வீதிகள்** |
| வாகனம் | : **தங்கச்சப்பரம்** |
| எழுந்தருளும் மண்டபம் | : **கோயிலுக்குள் சிவகங்கைராஜா மண்டகப்படி** |

திருவீதிவுலா முடிவுற்று திருக்கோயிலுக்கு வந்து சேரும் நேரம் : காலை 10.30 மணியளவில்

| | |
|---|---|
| இரவு எழுந்தருளும் நேரம் | : **7.30 மணியளவில்** |
| எழுந்தருளும் வீதிகள் | : **நான்கு மாசி வீதிகள்** |
| வாகனம் | : **தங்க ரிஷபம் – வெள்ளி ரிஷபம்** |

திருவீதிவுலா முடிவுற்று திருக்கோயிலுக்கு வந்து சேரும் நேரம் : இரவு 11.00 மணியளவில்

விபரம் : மாலை 6.00 மணிக்கு யானை மஹால் முன்பு அருள்மிகு திருஞானசம்பந்தப்பெருமான் சைவ சமயத்தை நிலைநாட்டிய வரலாறு (சைவ சமய ஸ்தாபித வரலாற்றுலீலை) தல ஓதுவாரால் சொல்லப்பட்டு பின் வீதிக்கு எழுந்தருளல்.

## திருவிழா தத்துவமும் பலனும் :

ஆறாம் நாள் திருவிழா காமாதி ஆறும், கலையாதி ஆறும், பதமுத்தி ஆறும், வினைக்குணம் ஆறினையும் ஒழித்தற் பொருட்டு நிகழ்வதாகும். ஆறாம் நாள் இரவு விருஷபவாகன சேவை மிகவும் முக்கியமானது. அடியார்களுக்கு ஆண்டவன் அருள்புரிய விருஷபவாகனத்தில் எழுந்தருளி வருவதை புராணாதிகளால் நன்கு அறியலாம். அருள்பெற்ற ஆன்மா விருஷபமாகும். அதன் வெள்ளைநிறம் அதனிடத்து எவ்வித மாசும் இல்லை என்பதை உணர்த்தும். தர்மம் என்ற அறத்தையே நான்கு கால்களாகக் கொண்டுள்ளது. சமம், விசாரம், சந்தோஷம், சாதுங்கம் என்ற நான்கு அறங்களும் நான்கு கால்களாய் அமைந்துள்ளன. மாசற்ற அறவடிவமான ஆன்மாக்களிடத்து இறைவன் வந்து அமர்வான் என்பதை இது குறிக்கின்றது. இது அனுக்கிரகக் கோலம்.

அண்ணல் ஆலவாய் நண்ணினான்தனை எண்ணியே தொழத் திண்ணம் இன்பமே.

# ஏழாம் திருநாள் – நந்திகேசுவரர் – யாளி வாகன உலா





**நந்திகேசுவரர்**

வந்துஇறை அடியில் தாழும்
வானவர் மகுட கோடி
பந்தியின் மணிகள் சிந்த,
வேத்திரப் படையால் தாக்கி,
அந்தியும் பகலும் தொண்டர்
அலகுஇடும் குப்பை ஆக்கும்
நந்திஎம் பெருமான் பாத
நகைமலர் முடிமேல் வைப்பாம்.

– பரஞ்சோதியார் திருவிளையாடற்புராணம்

**யாளி**

கிரிஎட்டும் என,மழையைக் கிழித்துஎட்டும்
புழைக்கை,மதிக் கீற்றுக் கோட்டுக்
கரிஎட்டும், சினமடங்கல் நால்எட்டும்,
எட்டெட்டுக் கணமும் தாங்க,
விரிஎட்டுத் திசைபரப்ப, மயன்நிருமித்து
உதவியஅவ் விமானம் சாத்தி
அரிஎட்டுத் திருஉருவப் பரஞ்சுடரை
அருச்சிப்பான் ஆயி னானே.

– பரஞ்சோதியார் திருவிளையாடற்புராணம்

**1427–ஆம் பசலி, திருவள்ளுவர் ஆண்டு 2049**

**நாள் : 24.04.2018 சித்திரை – 11 கிழமை : செவ்வாய்**

| | |
|---|---|
| காலை எழுந்தருளும் நேரம் | : 8.00 மணியளவில் |
| எழுந்தருளும் வீதிகள் | : நான்கு மாசி வீதிகள் |
| வாகனம் | : தங்கச்சப்பரம் |
| எழுந்தருளும் மண்டபம் | : கோயிலுக்குள் மீனாட்சி நாயக்கர் மண்டகப்படிக்கு சுவாமி அம்மன் நண்பகல் 12.00 மணிக்கு எழுந்தருளல் |

திருவிதிவுலா முடிவுற்று திருக்கோயிலுக்கு வந்து சேரும் நேரம் : காலை 10.30 மணியளவில்

| | |
|---|---|
| இரவு எழுந்தருளும் நேரம் | : 7.00 மணி |
| எழுந்தருளும் வீதிகள் | : நான்கு மாசி வீதிகள் |
| வாகனம் | : நந்திகேசுவரர் – யாளி |

திருவிதிவுலா முடிவுற்று திருக்கோயிலுக்கு வந்து சேரும் நேரம் : இரவு 10.30 மணியளவில்

விபரம் : காலை 8.00 மணிக்கு கங்காளநாதர் மட்டும் மாசி விதி எழுந்தருளல். இரவு சுவாமி அம்மன் நான்கு மாசி விதிகள் சுற்றி வந்து, அஷ்ட சக்தி மண்டபத்தில் திரு.எம். ராசு பண்டாரம் குமாரர்களால் நடத்தப்படும் புஷ்ப சிங்கார திருக்கண்ணில் இரட்டை சோடசோபசாரதிபாராதனை ஆன பின் கோயிலுக்குள் எழுந்தருளல்.

## திருவிழா தத்துவமும் பலனும் :

ஏழாம் நாள் திருவிழா எழுவகைப் பிறப்பு, கலையாதிகள் ஏழு, மாயாகுணம் ஏழு, என்னும் இவற்றைத் தவிர்த்தற் பொருட்டாகும். ஏழாம் நாள் காலையில் பிட்சாடனத் திருக்கோலத் திருவிழா நடைபெறும். தாருகாவனத்து ரிஷிகளும், ரிஷிபத்தினிகளும் ஆவண மலத்தால் தாங்கள் சுதந்திரர்களென எண்ணிக் கடவுளை மறந்தனர். அவர்கள் பரதந்திரர்களென உணர்த்துதற் பொருட்டு இறைவன் பிட்சாடன மூர்த்தியாய்ச் செல்ல, ரிஷிபத்தினிகள் அவரழகில் ஈடுபட்டனர். விஷ்ணு மோகினியாகச் செல்ல அவ்வழகில் ரிஷிகள் ஈடுபட்டனர். இவ்விரண்டு செயல்களாலும் ரிஷிகளும், அவர் பத்தினிமார்களும் பரதந்திரர்களேயென அவர்களை உணரச் செய்து, பரமன் மறைந்தருளினான். பராக்ரமக் கோலமே பிட்சாடனக் கோலமாகும். ஏழாம் நாள் இரவில் அதிகாரநந்தி வாகனம். இது விருத்திக்கிரம சங்காரக் கோலம் என்பர். அதிகார நந்தி மான், மழு, சதுர்ப்புஜம், முக்கண் முதலிய குறிகளோடு சாரூப்பிய பதவியைப் பெற்றவர். இவர் விஞ்ஞான கலர் எனும் ஆன்மாக்களுள் சிறந்தவர் ஆவர். கைலையில் சிவசந்நிதிதானத்தில் அதிகாரம் செலுத்துபவர். ஆதலால் அதிகாரநந்தி எனப் பெயர் பெற்றார்.

அம்பொன் ஆலவாய் நம்பனார் கழல் நம்பி வாழ்பவர் துன்பம் வீடுமே.

# எட்டாம் திருநாள் – ஊடல் உற்சவம் – பட்டாபிஷேகம் – வெள்ளி சிம்மாசன உலா



## வெள்ளி சிம்மாசனம்

அங்கம் ஆறுமே கால்களாய் முதல்எழுத்து அம்பொன்பீ டிகையாகித்
துங்க நான்மறை நூல்களே நித்திலம் தொடுத்துஅசை தாம்புஆகி
எங்கள் நாயகன் எம்பெரு மாட்டியோடு இருப்பதற்கு உருக்கொண்டு
தங்கி னால்என நவமணி குயின்றபொன் தவிசுஅது சமைத்திட்டார்.

– பரஞ்சோதியார் திருவிளையாடற்புராணம்



## பட்டாபிஷேகம்

செழியர்பிரான் திருமகளாய்க், கலைபயின்று,
முடிபுனைந்து, செங்கோல் ஓச்சி,
முழுதுஉலகும் சயம்கொண்டு, திறைகொண்டு,
நந்திகணம் முனைப்போர் சாய்த்துத்,
தொழுகணவற்கு அணிமணமா லிகைசூட்டித்,
தன்மகுடம் சூட்டிச், செல்வம்
தழைவுஉறுதன் அரசுஅளித்த பெண்ணரசி
அடிக்கமலம் தலைமேல் வைப்பாம்.

– பரஞ்சோதியார் திருவிளையாடற்புராணம்

**1427–ஆம் பசலி, திருவள்ளுவர் ஆண்டு 2049**

**நாள் : 25.04.2018** **சித்திரை – 12** **கிழமை : புதன்**

காலை எழுந்தருளும் நேரம் : **10.00 மணியளவில்**
எழுந்தருளும் வீதிகள் : **கீழச்சித்திரை வீதி, தெற்கு ஆவணி மூல வீதி,**
வாகனம் **திண்டுக்கல் ரோடு வழியாக மேலமாசி வீதி**
எழுந்தருளும் மண்டபம் : **தங்கப்பல்லக்கு**
: **மேலமாசி வீதி, திருஞானசம்பந்தர் சுவாமிகள் ஆதீனம் கட்டுச்செட்டி மண்டகப்படியில் தங்கி, பின் பிற்பகல் 3.00 மணிக்குப் புறப்பாடாகி கோயிலுக்குள் வருதல்**

இரவு எழுந்தருளும் நேரம் : **9.00 மணி**
எழுந்தருளும் வீதிகள் : **நான்கு மாசி வீதிகள்**
வாகனம் : **வெள்ளி சிம்மாசனம்**

திருவீதிவுலா முடிவுற்று திருக்கோயிலுக்கு வந்து சேரும் நேரம் : இரவு 12.30 மணியளவில்

**விபரம் :** காலை சபாநாயகர் புறப்பாடாகி ஊடல் லீலை நடைபெறும். **இரவு 7.40 மணிக்கு மேல் 8.04 மணிக்குள்** விருச்சிக லக்கனத்தில் அருள்மிகு மீனாட்சி அம்மனுக்கு அம்மன் சந்நிதி ஆறுகால் பீடத்தில் **பட்டாபிஷேகம்.** அருள்மிகு மீனாட்சி அம்மனுக்குக் கிரீடம் சாற்றி செங்கோல் கொடுத்தல். திருக்கோயில் தக்கார் **திரு. கருமுத்து தி. கண்ணன்** அவர்கள் அருள்மிகு மீனாட்சி அம்மனிடமிருந்து செங்கோல் பெற்று, சகல விருதுகளுடன் சுவாமி சந்நிதி இரண்டாம் பிரகாரம் சுற்றி வந்து, மீண்டும் அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கரத்தில் செங்கோலைச் சமர்ப்பிக்கும் காட்சியைக் கண்டு அம்மனின் திருவருள் பெற்று உய்ய வேண்டப்படுகிறது.

## திருவிழா தத்துவமும் பலனும் :

எட்டாம் நாள் திருவிழாவில் இரவு அருள்மிகு மீனாட்சியம்மன் பட்டாபிஷேகம் நடைபெறும். அருள்மிகு மீனாட்சியம்மனுக்கு அம்மன் சந்நிதி ஆறுகால் பீடத்தில் இரத்தின ஆபரணங்கள் இழைத்த இராயர் கீரிடம் சாற்றி இரத்தினங்கள் இழைத்த செங்கோல் வழங்கி ஆராதனைகளுடன் பட்டாபிஷேகம் நடைபெறும். அருள்மிகு மீனாட்சியம்மன் மதுரை நகரின் ஆட்சிப்பொறுப்பை ஏற்பது என்பது ஐதீகம். சித்திரை முதல் ஆவணி வரை நான்கு மாதங்கள் அம்மன் ஆட்சி நடைபெறுவதாக ஐதீகம். எட்டாம் நாள் உற்சவம் தன்வயத்தன் ஆதல் முதலிய கடவுட் குணங்கள் எட்டினையும் விளக்குதற் குறிப்புடையதாகும்.

அரக்கனார்வலி நெருக்கன் ஆலவாய் உரைக்கும் உள்ளத்தார்க்கு இரக்கம் உண்மையே.

# ஒன்பதாம் திருநாள் – திக்கு விஜயம் – இந்திர விமான உலா



இந்திர விமானம்

மொய்த்தபுனக் காடுஉறிந்து நிலம்திருத்தி
வரும்அளவில், முளைத்த ஞான
வித்துஅனைய சிவக்கொழுந்தின் திருமுடியில்
பரிதிகரம் மெல்லத் தீண்டச்,
சித்தம்நெகிழ்ந்து இந்திரன்தன் வெண்கவிகைத்
திங்கள்நிழல் செய்வான் உள்ளம்
வைத்தனன்,அப் போதுஇரவி மண்டலம்போல்
இழிந்ததுஒரு மணிவி மானம்.

– பரஞ்சோதியார் திருவிளையாடற்புராணம்



இந்திர விமானம்



திக்குவிஜயம்

கயபதி ஆதி ஆய வடபுலக் காவல் வேந்தர்
புயவலி அடங்க வென்று, புழைக்கைமான் புரவி மான்தேர்
பயல்மதி நுதல்வேல் உண்கண் பாவையர் ஆய மோடு
நயம்மலி திறையும் கொண்டு, திசையின்மேல் நாட்டம் வைத்தாள்.

இவ்வாறு மற்றைத் திசைகாவலர் யாரையும் போய்த்
தெவ்ஆண்மை சிந்தச் செருச்செய்து, திறமையும் கைக்கொண்டு
அவ்வாறு வெல்வாள் எனமூன்றுஅரண் அட்ட மேருக்
கைவார் சிலையான் கயிலைக்கிரி நோக்கிச் செல்வாள்.

– பரஞ்சோதியார் திருவிளையாடற்புராணம்

**1427–ஆம் பசலி, திருவள்ளுவர் ஆண்டு 2049**

**நாள் : 26.04.2018** **சித்திரை – 13** **கிழமை : வியாழன்**

| | |
|---|---|
| காலை எழுந்தருளும் நேரம் | : **7.00 மணியளவில்** |
| எழுந்தருளும் வீதிகள் | : **நான்கு மாசி வீதிகள்** |
| வாகனம் | : **மரவர்ணச் சப்பரம்** |
| எழுந்தருளும் மண்டபம் | : **கோயிலுக்குள் சிவகங்கைராஜா மண்டகப்படி** |

திருவீதிவுலா முடிவுற்று திருக்கோயிலுக்கு வந்து சேரும் நேரம் : காலை 9.30 மணியளவில்

| | |
|---|---|
| மாலை எழுந்தருளும் நேரம் | : **6.00 மணியளவில்** |
| எழுந்தருளும் வீதிகள் | : **நான்கு மாசி வீதிகள்** |
| வாகனம் | : **இந்திரவிமானம்** |

திருவீதிவுலா முடிவுற்று திருக்கோயிலுக்கு வந்து சேரும் நேரம் : அதிகாலை 1.00 மணியளவில்

**விபரம் : வடக்கு மாசி வீதி, கீழமாசி வீதி சந்திப்பு இடத்தில் உள்ள லாலாஸ்ரீ ரெங்க சத்திரம் திருக்கண் மண்டபத்திற்கு எழுந்தருளி அருள்மிகு மீனாட்சி அம்மன் திக்கு விஜயம்.**

## திருவிழா தத்துவமும் பலனும் :

ஒன்பதாம் நாள் திருவிழா இரவு அருள்மிகு மீனாட்சியம்மை தடாதகைப் பிராட்டியாக மதுரையம்பதியில் அவதரித்து ஆட்சி புரிகையில் மேற்கொண்ட திக்கு விஜய புராண வரலாற்று நிகழ்வினைக் குறிக்கும் வகையில் அம்மனின் திக்கு விஜயம் நடைபெறும். அப்பொழுது அம்மன்அஷ்ட திக்குபாலர்களை எதிர்த்து வெற்றி பெற்ற லீலை நடைபெறும். ஒன்பதாம் நாள் திருவிழா சகளம், நிஷ்களம், சகளநிஷ்களம் என்னும் வடிவம் மூன்றும், சிருஷ்டி முதலிய முத்தொழில்களும், தன்மை முதலிய மூன்றிடத்து இருத்தலுமாகிய ஒன்பதும் இல்லை என்பதைக் குறிப்பதாகும்.

அருவன் ஆலவாய் மருவினான்தனை இருவர் ஏத்தநின்ற உருவம் ஓங்குமே.

# பத்தாம் திருநாள் – திருக்கல்யாணம் – பூப்பல்லக்கு உலா







## திருக்கல்யாணம்

**காலை : 9.05 மணிக்கு மேல் 9.29 மணிக்குள்**

### ஆனந்தராயர் பூப்பல்லக்கு

பூவார் மலர்கொண்டு அடியார் தொழுவார் புகழ்வார் வானோர்கள்
மூவார் புரங்கள் எரித்த அன்று மூவர்க்கு அருள் செய்தார்
தூமாமழை நின்று அதிர வெருவித் தொறுவின் நிரையோடும்
ஆமாம் பிணை வந்து அணையும் சாரல் அண்ணா மலையாரே.

– சம்பந்தர் தேவாரம்

நித்தம் மணாளர் நிரம்ப அழகியர்
சித்தத்து இருப்பரால் அன்னே என்னும்
சித்தத்து இருப்பரால் தென்னன் பெருந்துறை
அத்தர் ஆனந்தரால் அன்னே என்னும்

– மாணிக்கவாசகர்

### யானை வாகனம்

மண்ணுலகில் பிறந்து நும்மை வாழ்த்தும் வழியடியார்
பொன்னுலகம் பெறுதல் தொண்டனேன் இன்று கண்டொழிந்தேன்
விண்ணுலகத்தவர்கள் விரும்ப வெள்ளையானையின் மேல்
என்னுடல் காட்டுவித்தான் நொடித்தான் மலை உத்தமனே.

– சுந்தரர் தேவாரம்

**1427–ஆம் பசலி, திருவள்ளுவர் ஆண்டு 2049**

**நாள் : 27.04.2018** | **சித்திரை – 14** | **கிழமை : வெள்ளி**

| | |
|---|---|
| காலை எழுந்தருளும் நேரம் | : 4.00 மணியளவில் |
| எழுந்தருளும் வீதிகள் | : நான்கு மாசி வீதிகள் |
| வாகனம் | : வெள்ளி சிம்மாசனம் |
| எழுந்தருளும் மண்டபம் | : கோயிலுக்குள் திருக்கல்யாண மண்டபத்தில் நாகப்பச் செட்டியார் கட்டளை மண்டகப்படி |
| இரவு எழுந்தருளும் நேரம் | : 7.30 மணியளவில் |
| எழுந்தருளும் வீதிகள் | : நான்கு மாசி வீதிகள் |
| வாகனம் | : யானை – ஆனந்தராயர் பூப்பல்லக்கு |

**திருவிதிவுலா முடிவுற்று திருக்கோயிலுக்கு வந்து சேரும் நேரம் : இரவு 11.30 மணியளவில்**

விபரம் : திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணியசுவாமியும், அருள்மிகு பவளக்கனிவாய்ப் பெருமாளும் காலை 6.00 மணிக்கு எழுந்தருளல். கோயிலுக்குள் அதிகாலை 4.00 மணிக்கு அழகர்சாமி நாயுடு, சூறாவளி சுப்பைய்யர், கல்யாண சுந்தர முதலியார் மண்டகப்படிகளாகி, நான்கு சித்திரை வீதிகள் சுற்றி வந்து, பின் முத்துராமய்யர் மண்டபத்தில் கன்னி ஊஞ்சலாகி, பின்பு திருக்கல்யாண மண்டபத்திற்கு எழுந்தருளி காலை 9.05 மணிக்குமேல் 9.29 மணிக்குள் மிதுன லக்கனத்தில் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாணம். இரவு திரு. ஏ.சொக்கலிங்கம் பிள்ளை டிரஸ்டிலிருந்து புஷ்ப அலங்காரம் செய்யப்பெற்ற ஆனந்தராயர் பூப்பல்லக்கில் அம்மனும் சுவாமி யானை வாகனத்தில் எழுந்தருளி திருவீதி உலா.

## திருவிழா தத்துவமும் பலனும் :

பத்தாம் நாள் திருக்கல்யாண திருவிழா மக்கள் புணர்வுறு போகம் மூழ்க இறைவன் புருடனும் பெண்ணுமாகித் திருமணம் கொண்டு ஆற்றுப்படுத்தலைக் குறிப்பதாகும். இறைவனும் இறைவியும் புரிந்து கொள்ளும் கல்யாணம் திருக்கல்யாணம் எனப்படும். போகியாயிருந்து உயிர்களுக்குப் போகத்தைப் புரிகின்றான். இறைவன் போகவடிவில் வாழமற் போனால் உலகத்து உயிர்கள் அனைத்தும் போகியாய் வாழ இயலாது. ஆதலின், இறைவன் திருக்கல்யாணம் புரிவது நம் பொருட்டேயாகும். பத்தாம் நாள் இரவு யானை வாகனத்தின் மீது இறைவன் ஏறி எழுந்தருளுகிறான். இது இலயக்கிரம சிருட்டிக் கோலமாகும். இலயக்கிரமம் என்பதற்கு ஒடுங்கும் முறை என்பது பொருள். உலகப்பொருள்கள் அனைத்தும் இறைவனிடம் ஒடுங்கி ஒரே பிண்டமான யானையின் உடம்புபோல் பருமனாய்க் கிடந்து ஒடுங்குதலாகும். அதிலிருந்து திரும்பவும் தோன்றுவது இலயத்தின் பின் சிருட்டி தொடங்குவதைக் குறிக்கும். யானையின் நான்கு பாதங்கள் பிண்டாகார உற்பவஜடத்வம், சுவாசசூக்குமம், வாஜிஜீவத்வம், பிராணாயாமம் இவைகளைக் குறிக்கின்றது. இவை யானையைப்போல ஆத்மஞானத்தில் தோன்றி, துதிக்கையை ஒத்த சுஷும்னையில் நிலைநிற்கும். யானையின் மேல் வைக்கும் அம்பாரி முதலியன வெளித்தோற்ற அண்டாகாரமாகும். உற்பவ, சூக்கும, ஜீவ, மாயாஞானங்கள் ஆத்ம ஞானத்திலும், அவை ஈசுவர சைதன்யத்தும், ஈசுவர சைதன்யம், பிரம சைதன்யத்திலும் இலயிக்கிறது என்பதைக் குறிக்கின்றது.

ஆரம் நாகமாம் சீரன் ஆலவாய்த் தேர மண்செற்ற வீரன் என்பரே.

# பதினோறாம் திருநாள் – திருத்தேரோட்டம் – சப்தாவர்ணச்சப்பர உலா



## திருத்தேரோட்டம்

போழொத்த வெண்மதியம் சூடிப் பொலிந்திலங்க
வேழத்து உரிபோர்த்தான் வெள்வளையாள் தான் வெருவ
ஊழித்தீ அன்னானை ஓங்கொலிமாப் பூண்டதோர்
ஆழித்தேர் வித்தகனை நான் கண்டது ஆரூரே.

– நாவுக்கரசர் தேவாரம்



## சப்தாவர்ணச்சப்பரம்

துத்தம் கைக்கிளை விளரிதாரம்
உழைஇளி ஓசை பண்கெழுமப் பாடிச்
சச்சரி கொக்கரை தக்கையோடு
மத்தளம் கரடிகை வன்கைமென்தோல்
தமருகங் குடமுழா மொந்தை வாசித்
தத்தனை விரவினோடு ஆடும் எங்கள்
அப்பனிடந் திருஆலங்காடே.

– காரைக்கால் அம்மையார் அற்புத திருவந்தாதி.

**1427–ஆம் பசலி, திருவள்ளுவர் ஆண்டு 2049**

**நாள் : 28.04.2018** **சித்திரை – 15** **கிழமை : சனி**

| | |
|---|---|
| காலை எழுந்தருளும் நேரம் | : **6.00 மணியளவில்** |
| எழுந்தருளும் வீதிகள் | : **நான்கு மாசி வீதிகள்** |
| வாகனம் | : **திருத்தேர்** |
| எழுந்தருளும் மண்டபம் | : **கோயிலுக்குள் ம. முத்தம்பல முதலியார் கட்டளை மண்டகப்படி இராமநாதபுரம் சேதுபதி மகாராஜா மண்டகப்படியும்** |
| இரவு எழுந்தருளும் நேரம் | : **7.00 மணியளவில்** |
| எழுந்தருளும் வீதிகள் | : **நான்கு மாசி வீதிகள்** |
| வாகனம் | : **சப்தாவர்ணச்சப்பரம்** |

திருவீதிவுலா முடிவுற்று திருக்கோயிலுக்கு வந்து சேரும் நேரம் : இரவு 10.30 மணியளவில்


**விபரம் : அதிகாலை 5.00 மணி முதல் 5.30 மணிக்குள் மேஷ லக்கனத்தில் சுவாமி அம்மன் தேருக்கு எழுந்தருளல். காலை 6.30 மணிக்கு திருத்தேர் வடம்பிடித்தல்.**

## திருவிழா தத்துவமும் பலனும் :

பதினோறாம் நாள் நடைபெறும் திருத்தேர் திருவிழா இறைவனின் சங்காரம் (மறைத்தல், அருளல்) குறித்து நடைபெறுவதாகும். மேலும் ஆன்மாக்களுக்கு உயர்வு நல்கிவருவதையும் குறிப்பதாகும். தேரின் அமைப்பு அண்ட பிண்டத்திற்குச் சமானம். விசுவவிராட் சொரூபமே எட்டு அடுக்குகளாகும். உச்சியிலிருக்கும் கும்பம் சோடசாந்தம்; அதற்கு அடுத்த கீழடுக்கு துவாதசாந்தம்; அதற்கடுத்தது மஸ்தக அதிஸ்தானம்; அதற்கடுத்தது மஸ்தக மத்தியஸ்தானம்; அதற்கடுத்தது மஸ்தக அந்தஸ்தனம்; அதற்கடுத்தது புருவமத்தியஸ்தானம்; நடுவில் தாங்கும் குத்துக்கால்கள் தத்துவக்கால்கள்; முன் மூன்று துறைகள் மூன்று கண்கள். பின்னவை, சிகையும் இட, வலக்காதுகளுமாகும்; இறைவன் எழுந்தருளியிருக்கும் கேடய பீடம் முப்பாழ்; குதிரைகள் சூரிய, சந்திரகலைகள்; சாரதி அக்னிக்கலை இவை நாசியாகும்; அடுத்த அடுக்கு கண்டஸ்தானம்; அதை அடுத்த அடுக்கு இருதய ஸ்தானம்; அதை அடுத்த அடுக்கு நாபி; அதற்கு அடுத்த அடுக்கு குண்டலி ஸ்தானம்; பத்துச் சக்கரங்களும் தசவாயுக்கள். இறைவன் இதற்குக்கர்த்தா தான்ஒருவனே என்றுணர்த்தி இவ்வாறமைந்த பிண்டத்துவ சரீரமாகிய இரதத்தில் தசவாயுக்களாகிய சக்கரங்களை நிறுத்தி, அசைவற்ற மனத்தை உந்தி, குண்டலியிருந்து நாபிக்கும், அதிலிருந்து கண்டத்திற்கும், அதிலிருந்து வாய்க்கும் ஏற்றி இலயப்படுத்தி, முறையே இரதக்குதிரையாம் நாசிக்கும் அங்கிருந்து கண்வழியாகவும் நடுவழியாகவும் மேல்நோக்கி ஆறாம் அடுக்காகிய புருவமத்திக்கும் ஏற்றி இலயப்பட்டு சும்மா இருந்தபடி இருக்கும் நித்திய சுகியாய் இருந்திடல் வேண்டும் என்ற இலயக்கிரமத்தைக் காட்டுகிறது. மேலும் தேர் திரிபுராதிகளைச் சிவன் சிரித்து எரித்து ஆன்ம கோடிகளைக் காப்பாற்றிய ஸ்திதித் தொழிலுக்கும் அறிகுறியாகும்.

அடிகள் ஆலவாய்ப் படிகொள் சம்பந்தன் முடிவில் இன்தமிழ் செடிகள் நீக்குமே.

# பன்னிரண்டாம் திருநாள் – தேவேந்திர பூஜை – ரிஷப வாகன உலா





## ரிஷப வாகனம்

பாசமான களைவார் பரிவார்க்கு அமுதம் அனையார்
ஆசைதீரக் கொடுப்பார் அலங்கல் விடைமேல் வருவார்
காசை மலர் போல் மிடற்றார் கடவூர் மயானம் அமர்ந்தார்
பேச வருவார் ஒருவர் அவர் எம்பெருமானடிகளே.
– சம்பந்தர் தேவாரம்.

**1427–ஆம் பசலி, திருவள்ளுவர் ஆண்டு 2049**

**நாள் : 29.04.2018** **சித்திரை – 16** **கிழமை : ஞாயிறு**

காலை எழுந்தருளும் மண்டபம் : **கோயிலுக்குள் திருக்கல்யாண மண்டபம் ஆடிட்டர் லெட்சுமணன் சிவராமன் மண்டகப்படி**

இரவு எழுந்தருளும் நேரம் : **7.00 மணியளவில்**
எழுந்தருளும் வீதிகள் : **நான்கு மாசி வீதிகள்**
வாகனம் : **வெள்ளி ரிஷபம்**

திருவீதிவுலா முடிவுற்று திருக்கோயிலுக்கு வந்து சேரும் நேரம் : இரவு 10.30 மணியளவில்

விபரம் : உச்சிகாலத்தில் பொற்றாமரைக்குளத்தில் தீர்த்தம், தேவேந்திர பூஜை. இரவு 9 மணிக்கு திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமியும், அருள்மிகு பவளக்கனிவாய்ப் பெருமாளும் 16 கால் மண்டபத்தில் விடை பெற்றுக் கொள்ளுதல்.

## திருவிழா தத்துவமும் பலனும் :

பன்னிரண்டாம் நாள் திருவிழா தீர்த்தத் திருவிழா சிவானந்தமாகிய பேரின்பக் கடலில் ஆன்மா திளைப்பதைக்குறிக்கும். பொங்கித்ததும்பிப் பூர்ணமாய் ஏக உருவாய்க்கிடக்கும் இறையின்ப வாரியில் ஆன்மாக்கள் முற்றும் ஆழ்ந்து ஆனந்திப்பதைத் தீர்த்தவாரி குறிக்கின்றது. இதனை மகாருத்ரபாத தீர்த்தம் என்பர். இரவு விருஷபவாகன சேவை மிகவும் முக்கியமானது. அடியார்களுக்கு ஆண்டவன் அருள்புரிய விருஷபவாகனத்தில் எழுந்தருளி வருவதை புராணாதிகளால் நன்கறியலாம். அருள்பெற்ற ஆன்மா விருஷபமாகும். அதன் வெள்ளைநிறம் அதனிடத்து எவ்வித மாசும் இல்லை, என்பதை உணர்த்தும். தர்மம் என்ற அறத்தையே நான்கு கால்களாகக் கொண்டள்ளது. சமம், விசாரம், சந்தோஷம், சாதுங்கம் என்ற நான்கு அறங்களும் நான்கு கால்களாய் அமைந்துள்ளன. மாசற்ற அறவடிவமான ஆன்மாக்ளிடத்து இறைவன் வந்து அமர்வான் என்பதை இது குறிக்கின்றது. இது அனுக்கிரகக் கோலம்.

## திருக்கோயில் கட்டண விபரங்கள்

| | ரூ. பை. |
|---|---|
| உபயவரவு | 10.00 |
| துலாபாரம் | 5.00 |
| ஜெபக்குடம் | 10.00 |
| மாவிளக்கு | 5.00 |
| தர்ப்பணம் | 20.00 |
| சிறப்பு நுழைவு (அம்மன் சந்நிதி) | 50.00 |
| சிறப்பு நுழைவு (சுவாமி சந்நிதி) | 50.00 |
| கல்யாணம் | 100.00 |
| புரோகிதம் | 30.00 |
| சகஸ்ரநாமம் | 25.00 |
| திரிசதை | 25.00 |
| ஐயப்பன் மாலை | 10.00 |
| உபய அபிஷேகம் | 10.00 |
| அர்ச்சனை | 5.00 |
| கல்யாணத் தாம்பூலம் | 50.00 |
| மொட்டை கோபுர மாலை | 50.00 |
| வெளிநாட்டினர் நுழைவுச் சீட்டு | 50.00 |
| திருவிளக்கு பூஜை | 10.00 |
| சினிமாப்படச்சுருள் மற்றும் புதுக்கணக்கு சுவாமி, அம்மன் பாதத்தில் வைத்து எடுக்க | 250.00 |
| அம்மன் பூப்பாவாடை (புஷ்ப அங்கி) | 250.00 |
| மோட்ச தீபம் | 50.00 |
| சுவாமி புறப்பாட்டின் போது மாலை சாத்தி தேங்காய் உடைத்து, கற்பூரம் காண்பிக்க | 5.00 |
| சுவாமி புறப்பாட்டில் வீதியில் சுவாமிக்கு சாத்தும் பரிவட்டம் ஒன்றுக்கு | 10.00 |
| பொருள் பாதுகாப்பு | 2.00 |
| கைபேசி பாதுகாப்புக் கட்டணம் | 10.00 |

## அன்னதானத் திட்டம்

### "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"

**அன்னதானத்திட்டம்** இத்திருக்கோயிலில் செயல்பாட்டில் உள்ளது. நல்ல சுகாதார முறைப்படி உணவு தயாரிக்கப்பட்டு வெளியூர் மற்றும் உள்ளூர் பக்தர்களுக்கு நண்பகல் 12.00 மணிக்கு பரிமாறப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் பங்கு கொள்ள விரும்பும் உபயதாரர்கள் கீழ்க்கண்டுள்ள விபரப்படி தொகை செலுத்தினால், அவரது பிறந்தநாள், திருமண நாள் மற்றும் முன்னோர்களின் நினைவுநாள் அல்லது உபயதாரர் குறிப்பிடும் நாள், இவற்றில் ஏதேனும் ஒரு நாளில் அன்னதானம் வழங்கப்படும்.

இத்திட்டத்திற்கு வழங்கும் நன்கொடைகளுக்கு வருமான வரி சட்டப்பிரிவு 80 (ஜி)-ன் கீழ் வரிவிலக்கு உண்டு.

| | திருக்கோயில் விபரம் | ஒரு நாள் அன்னதானம் செய்வதற்கு | வருடத்தில் ஒரு நாள் அன்னதானம் செய்வதற்கு (ஒரே முறை நிரந்தர முதலீடு செய்தல்) |
|---|---|---|---|
| 1. | அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை (300 நபர்கள்) | ரூ.7,500 /- | ரூ,75,000/- |
| 2. | அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், தெப்பக்குளம், மதுரை (100 நபர்கள்) | ரூ. 2,500/- | ரூ, 25,000/- |
| 3. | அருள்மிகு திருவாப்புடையார் திருக்கோயில், செல்லூர், மதுரை (100 நபர்கள்) | ரூ. 2,500/- | ரூ, 25,000/- |
| 4. | அருள்மிகு முத்தீஸ்வரர் திருக்கோயில் தெப்பக்குளம், மதுரை (50 நபர்கள்) | ரூ. 1,250/- | ரூ, 12,500/- |
| 5. | அருள்மிகு திருமறைநாதச் சுவாமி திருக்கோயில் திருவாதவூர் மதுரை (50 நபர்கள்) | ரூ. 1,250/- | ரூ, 12,500/- |

உ
சிவமயம்

# அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் சார்பாக நடைபெறும் சேவைகள்

| | | |
|---|---|---|
| 1. | உபய வைரக்கீரிட சேவை கட்டணம் | ரூ.5001/- |
| 2. | உபய திருக்கல்யாண உற்சவக் கட்டணம் | ரூ.1501/- |
| 3. | தங்கரத புறப்பாட்டுக் கட்டணம் | ரூ.1501/- |
| 4. | அம்மன் மற்றும் சுவாமி ஒரு கால அபிஷேகக் கட்டணம் | ரூ.1300/- |
| 5. | அருள்மிகு பத்ரகாளி, முக்குறுணி விநாயகர் அபிஷேகக் கட்டணம் (சந்நிதி 1க்கு) | ரூ.1000/- |
| 6. | அருள்மிகு தட்சணாமூர்த்தி, மகாலெட்சுமி, துர்க்கை, சரஸ்வதி முதலான தெய்வங்களுக்கு அபிஷேகக் கட்டணம் (சந்நிதி 1க்கு) | ரூ.550/- |
| 7. | அருள்மிகு தட்சணாமூர்த்தி, மகாலெட்சுமி, துர்க்கை, சரஸ்வதி முதலான தெய்வங்களுக்கு சந்தனக்காப்பு அலங்காரம் செய்ய கட்டணம் (சந்நிதி 1க்கு) | ரூ.1000/- |
| 8. | அருள்மிகு பத்ரகாளி, முக்குறுணி விநாயகர் முதலான தெய்வங்களுக்கு சந்தனக்காப்பு அலங்காரம் செய்ய கட்டணம் (சந்நிதி 1க்கு) | ரூ.2250/- |
| 9. | சித்தர் சந்நிதி பூக்கூடாரச் சேவைக் கட்டணம் | ரூ.500/- |
| 10. | முக்குறுணி விநாயகர் கொழுக்கட்டை நெய்வேத்தியம் | ரூ.15000/- |

## அருள்மிகு மீனாட்சி அம்மன் அருட்பிரசாதம் குங்குமம்

திருக்கோயில் மூலமாக, விரலி மஞ்சள், கஸ்தூரி மஞ்சள், நல்லெண்ணெய், நறுமணப் பொருட்கள், கடைச்சரக்குகள் ஆகியவற்றைக் கொண்டு சிறந்த முறையில் திருக்கோயில் வளாகத்திலேயே தயாரிக்கப்பட்ட அருள்மிகு மீனாட்சி அம்மன் அருட்பிரசாத தாழம்பூ குங்குமம் கீழ்க்கண்ட விலை விபரப்படி விற்பனைக்கு உள்ளது. பக்தர்கள் வாங்கி பயன்பெற கேட்டுக்கொள்கிறோம்.




**விலை விபரம்**

| எடை | விலை |
|---|---|
| 8 கிராம் | ரூ.3/- |
| 40 கிராம் | ரூ.15/- |
| 100 கிராம் | ரூ.35/- |

## வலைதள சேவை

இத்திருக்கோயிலில் நடைமுறையில் உள்ள அனைத்து சேவைகளையும் திருக்கோயிலின் வலைதள முகவரியான www.maduraimeenakshi.org.- ன் மூலம் முன்பதிவு செய்து கொள்ளலாம்.

அறிவிப்பு : திருக்கோயிலின் உள்ளே கைபேசி (செல்போன்) பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. எனவே கைபேசிகளை கொண்டு வருவதை தவிர்க்கவும்.

Mobile Phones are strictly prohibited in inside the Temple. So Avoid the Mobile Phones

நன்கொடைகள் மற்றும் சேவைக்கட்டணங்களை வரைவோலை மற்றும் காசோலை மூலமாகவும் செலுத்தலாம்.

**"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"**

அன்னதானத் திட்டம் இத்திருக்கோயிலில் செயல்பாட்டில் உள்ளது

(இதற்கு வழங்கும் நன்கொடைகளுக்கு வருமானவரி சட்டப்பிரிவு 80(ஜி)ன் கீழ் வரிவிலக்கு உண்டு)

ஆடக மதுரை அரசே போற்றி!! சூடல் இலங்கு குருமணி போற்றி!!

# சேவைக்கட்டளைகள்

## ஒரு கால அபிஷேகம் மற்றும் பூஜை திட்டம்

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் அம்மன் சுவாமிக்கு ஒருகால அபிஷேகம் மற்றும் பூஜை திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. திருக்கோயில் மூலம் ரூ. 25000/- முதலீடு செய்யும் உபயதாரர்கள், அவர்கள் விரும்பும் தேதியில் மேற்படி தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து வருடத்திற்கு ஒரு நாள் கட்டளை நடத்தி பிரசாதம் வழங்கப்படும். இக்கட்டளைக்கு நன்கொடையாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள். நன்கொடை அளித்து இரசீது பெற்றுக்கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## நெய் தீபக் கட்டளை

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் அம்மன் சுவாமிக்கு நெய் தீபம் ஏற்றும் கட்டளை ஏற்படுத்தப்பட்டுள்ளது. திருக்கோயில் மூலம் ரூ. 25000/- முதலீடு செய்யும் உபயதாரர்கள், அவர்கள் விரும்பும் தேதியில் மேற்படி தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து வருடத்திற்கு ஒரு நாள் கட்டளை நடத்தி பிரசாதம் வழங்கப்படும். இக்கட்டளைக்கு நன்கொடையாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள். நன்கொடை அளித்து இரசீது பெற்றுக்கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## அலங்காரத் கலர்த்திண்டு மாலை நித்திய சாத்துப்படி கட்டளை

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் அம்மன் சுவாமிக்கு நான்கு பூஜை காலத்திலும் அலங்காரக் கலர்த்திண்டு மாலை நித்திய சாத்துப்படி கட்டளை ஏற்படுத்தப்பட்டுள்ளது. திருக்கோயில் மூலம் ரூ. 25000/- முதலீடு செய்யும் உபயதாரர்கள், அவர்கள் விரும்பும் தேதியில் மேற்படி தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து வருடத்திற்கு ஒரு நாள் கட்டளை நடத்தி பிரசாதம் வழங்கப்படும். இக்கட்டளைக்கு நன்கொடையாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள். நன்கொடை அளித்து இரசீது பெற்றுக்கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## உச்சிகால இலவச பிரசாத நெய்வேத்திய கட்டளை

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் உச்சிகாலத்தின் போது அம்மனுக்கு பிரசாதம் நெய்வேத்தியம் செய்து பக்தர்களுக்கு வழங்க உச்சிகால இலவச பிரசாத நெய்வேத்திய கட்டளை ஏற்படுத்தப்பட்டுள்ளது. திருக்கோயில் மூலம் ரூ. 15000/- முதலீடு செய்யும் உபயதாரர்கள், அவர்கள் விரும்பும் தேதியில் மேற்படி தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து வருடத்திற்கு ஒரு நாள் கட்டளை நடத்தி பிரசாதம் வழங்கப்படும். இக்கட்டளைக்கு நன்கொடையாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள். நன்கொடை அளித்து இரசீது பெற்றுக்கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## மாலை புஷ்பம் சாத்துப்படி செய்யும் கட்டளை

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் எல்லாம் மூர்த்திகளுக்கும் மாலை புஷ்பம் சாத்துப்படி செய்யும் கட்டளை ஏற்படுத்தப்பட்டுள்ளது. திருக்கோயில் மூலம் ரூ. 15000/- முதலீடு செய்யும் உபயதாரர்கள், அவர்கள் விரும்பும் தேதியில் மேற்படி தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து வருடத்திற்கு ஒரு நாள் கட்டளை நடத்தி பிரசாதம் வழங்கப்படும். இக்கட்டளைக்கு நன்கொடையாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள். நன்கொடை அளித்து இரசீது பெற்றுக்கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## தங்கரத புறப்பாட்டு சேவை கட்டளை

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் தங்கரத புறப்பாட்டு சேவை கட்டளை ஏற்படுத்தப்பட்டுள்ளது. திருக்கோயில் மூலம் ரூ. 25000/- முதலீடு செய்யும் உபயதாரர்கள், அவர்கள் விரும்பும் தேதியில் மேற்படி தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து வருடத்திற்கு ஒரு நாள் கட்டளை நடத்தி பிரசாதம் வழங்கப்படும். இக்கட்டளைக்கு நன்கொடையாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள். நன்கொடை அளித்து இரசீது பெற்றுக்கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## உபய திருக்கல்யாண சேவை கட்டளை

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் உபய திருக்கல்யாண சேவை கட்டளை ஏற்படுத்தப்பட்டுள்ளது. திருக்கோயில் மூலம் ரூ. 25000/- முதலீடு செய்யும் உபயதாரர்கள், அவர்கள் விரும்பும் தேதியில் மேற்படி தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து வருடத்திற்கு ஒரு நாள் கட்டளை நடத்தி பிரசாதம் வழங்கப்படும். இக்கட்டளைக்கு நன்கொடையாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள். நன்கொடை அளித்து இரசீது பெற்றுக்கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## அன்னதான கட்டளை

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் அன்னதான கட்டளை ஏற்படுத்தப்பட்டுள்ளது. திருக்கோயில் மூலம் ரூ. 75000/- முதலீடு செய்யும் உபயதாரர்கள், அவர்கள் விரும்பும் தேதியில் மேற்படி தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து வருடத்திற்கு ஒரு நாள் கட்டளை நடத்தி பிரசாதம் வழங்கப்படும். இக்கட்டளைக்கு நன்கொடையாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள். நன்கொடை அளித்து இரசீது பெற்றுக்கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.


நன்கொடை அனுப்பவேண்டிய முகவரி

e-pooja **இணை ஆணையர்/செயல் அலுவலர்** e-donation

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை - 625 001. தபால் பெட்டி எண் : 100

தொலைபேசி எண்கள் : அலுவலகம் : (0452) 2344360, உள்துறை : (0452) 2349868, பிர்லா தங்கும் விடுதி : (0452) 2345503

Website : www.maduraimeenakshi.org E-mail : info@maduraimeenakshi.org jc@maduraimeenakshi.org



சித்திரைத் திருவிழா மின் அலங்கார உபயம் :

**HI - TECH ARAI PRIVATE LIMITED** Arcs-HTA



திருத்தேரோட்டம்




GRT
G.R.Thanga Maligai
JEWELLERS
Since 1964

108 - 109, நேதாஜி ரோடு, மதுரை. போன்: 0452 - 434 1515.

தமிழ்நாடு | புதுச்சேரி | ஆந்திரப் பிரதேசம் | தெலுங்கானா | கர்நாடகா

துபாய் | சிங்கப்பூர்

Shop online at: www.grtjewels.com | mail@grtjewels.com